# DEPARTMENT OF TECHNICAL EDUCATION

From

The Director,
Directorate of Technical Education,
Guindy, Chennai-600 025.

To,

1. The Principals,
Government/ Government Aided/ Self Financing Engineering Colleges and Polytechnic Colleges & Special Institutions

2. The District Nodal Officers (Annexure)

**Letter No. 24653/Y3/2026, dated:16.07.2026**

Sir/Madam,

Sub: Technical Education – Anti Drug Clubs – Orientation Programme on Awareness about the Harmful Effects of Drugs and Banned Tobacco Products for Students – Academic Year 2026–2027 – Instructions – Communicated - reg

Ref : 1. This Office Proceedings No. DoTE/1069/2025-Y3, dated.15.07.2025
2. Government Letter No.1672/H,P&E(XVI)/2026-2, Home, Prohibition and Excise (XVI) Department dated.04.02.2026
3. This Office Letter No. DoTE / 402 / 2025- Y3, dated.09.02.2026
4. D.O.Letter No.15670/H,P&E (XVI)/2026-5, from Home, Prohibition and Excise Department dated. 07.07.2026

*****

With reference to the D.O. letter (4) cited above, It is stated that an Orientation Programme on Awareness about the Harmful Effects of Drugs and Banned Tobacco Products to be conducted for all students at the beginning of the Academic Year 2026–2027 in all Government/ Government Aided/ Self-Financing Engineering Colleges and Polytechnic Colleges & Special Institutions.

It is also informed that the Coordinators of Anti Drug Clubs have already been trained through the District Master Trainers vide this office letter (3) cited above. The resource materials for conducting the orientation programme, in both Tamil and English, are enclosed herewith for effective implementation.

Therefore, all the Principals are requested to ensure that:

- The Orientation Programme is conducted for all students at the commencement of the Academic Year 2026–2027.
- The Coordinators of the Anti Drug Clubs are actively involved in organizing and conducting the programme.
- The enclosed resource materials are effectively utilized during the orientation sessions.
- Officials from the stakeholder departments such as Health and Family Welfare, Police, and other concerned departments may be invited, wherever feasible, to participate as resource persons and create awareness among the students.
- The programme is organized in coordination with the guidance of the concerned District Collectors.
- The orientation programme is effectively monitored, and maximum student participation is ensured.

All the Principals are also requested to submit the details of the orientation programme through the following Google Form https://forms.gle/rMpk5A6STxLenUcg6 on or before 24.07.2026.

Further, all the District Nodal Officers are also requested to ensure that the Orientation Programme is conducted in all the colleges under their jurisdiction and to instruct the respective institutions to submit the above-mentioned Google form within the stipulated time.

Encl: As above.

16/7/26

for Director of Technical Education

16/7/26

Copy Submitted to,

1. The Additional Chief Secretary to the Government
   Home, Prohibition and Excise Department,
   Secretariat, Chennai – 9
2. The Secretary to the Government,
   Higher Education Department,
   Secretariat, Chennai – 9

Copy to,

The Registrar,
Anna University, Chennai – 600 025

**Dr.K. Manivasan, I.A.S.,**
**Additional Chief**
**Secretary to Government**

**Home, Prohibition and**
**Excise Department,**
**Secretariat, Chennai-9**

**D.O. Letter No.15670/H,P&E (XVI)/2026-5,dated 07.07.2026**

Dear Thiru Rathinasamy,

Sub: Drug Free Tamil Nadu – Creation of awareness regarding drugs and banned tobacco products - Orientation programme to be conducted in all Colleges in the State – Instructions issued – regarding.

------------

I am to state that an orientation programme on awareness about harmful effects of drugs and banned tobacco products to College students in the State shall be conducted in the beginning of the new academic year 2026-2027.

2. I am also to inform that all the co-ordinators of Anti Drug Clubs have been already trained through District Master Trainers. The resource material for the orientation programme both in Tamil and English is sent herewith.

3. I am to request you to involve the co-ordinators of Anti Drug Clubs in colleges in conducting the above orientation programme and instruct the concerned Officials to organize and monitor this orientation session in all Government/ Aided /Self Financing Colleges, with the guidance of concerned District Collectors. All officials of stakeholder departments such as School Education, Health and Family Welfare, Police, DCPO etc may be requested to participate in the above programme.

4. An action taken report in this regard may be sent to Government

Best Wishes

Yours sincerely,

[signature] 8.7.26

To
Thiru.P.Rathinasamy, I.A.S
The Director of Technical Education,
53, Sardar Patel Rd, Anna University,
Guindy, Chennai-600 025.

# Orientation Programme on
# Drugs, Substance Abuse & Banned Tobacco Products Prevention

# Introduction

- Substance abuse has become a significant **social phenomenon**, and all over the world, there has been an alarming rise in its incidence.
- The **Mission Management Unit (MMU)** has been established to guide, coordinate and monitor all the activities of the stake-holding departments to ensure the Drug-Free Tamil Nadu.
- **Anti-Drug Club (ADC) was launched in the year 2022**, with the primary objective to create awareness among students regarding the ill effects of drug abuse. The motto of the ADC is "Drug Free Tamil Nadu".
- Based on the motto to sustain Anti Drug Awareness and involve students as stakeholder in the effort two programme have been constituted (i.e.) Anti-Drug Club and Volunteering programme for NSS/NCC/RRC/YRC volunteer in all the Educational Institutions.

# Introduction

- Drug-related issues in society are a concern that requires everyone to take responsibility at the societal level. Drugs and drug-related problems are often group-based issues. Therefore, in the WAR against drug use, we must also form groups that can address these problems at the grassroots level. Only then can we resolve these issues effectively.

# Introduction

## Drug:

**Any Chemical** that alters the Physical or mental functioning of an individual is a drug

## Drug Abuse


When a drug is taken for reasons other than medical, in an amount, strength, frequency or manner **that causes damage to the physical or mental functioning** of an individual, it becomes "drug abuse".

## Dependence and Tolerance

**Drug abuse can lead to drug addiction** with the development of tolerance and dependence.

Tolerance refers to a condition where the **user needs more and more of the drug to experience the same effect**. Slowly drug dependence develops.

# Commonly Abused Drugs



# TYPE OF DRUGS ON EFFECT

**Stimulants**

- Stimulate the central nervous system, produce higher heart rate, elevated blood pressure, and increased mental activity
- *Ex. Cocaine, MDMA, Amphetamine, etc.,*

**Depressants**


- Slow down the activity of central nervous system and induce states of Euphoria *(strong feeling of happiness),* intoxication, relaxation.
- *Ex. Heroin, Marijuana, etc.,*

**Hallucinogens**


- Drugs that distort normal visions, hearing and feeling functions intended to produce mind expansion.
- *Ex. LSD, Magic Mushroom, etc.,*



Central Nervous System





While Eating Food




While Using Drugs

# THREE MAIN FACTORS THAT CONTRIBUTE TO DRUG ABUSE



# Why Adolescent use drugs




**Peer Pressure**




**Curiosity**



**Academic & Sports Failure**



**Family Influence**




**Lack of Awareness**



**Experiment**

# Why Adolescent use drugs

Escapism



Lack of Education





Stress or Emotional Struggles

# Signs of Drug Abuse (Physical)

- Dull/Glazed Eyes
- Drowsiness, Coughing, Diarrhea
- Respiratory Problems
- Loss of Appetite
- Loss of Weight
- Loss of Immunity

# Signs of Drug Abuse (Psychological)

- Mood Swings & Mental Disorder
- Memory Problem
- Inability to Concentrate
- Lack of Motivation

# Signs of Drug Abuse (Behavioral)

- Desire to Engage in Risky Behavior
- Change in Appearance
- Shabby Dress Sense
- Involuntary Shaking of Body
- Feeling Ashamed
- Decreased Interest in Every Day
- Priority for Privacy & Secretiveness
- Increasing Tolerance to Drugs

# Signs of Drug Abuse (Social)

- Academic Issues – school/college drop out, deterioration in performance
- Loss of Good Friends
- Loss of Parental Trust

Physical, Psychological, Moral & Intellectual deterioration






Increase in Domestic Violence: Breakup in Relations, Eveteasing, Clashes and Impulsive murders

# Impact of Drug Abuse

Illegal distribution of drugs to others




Risk of HIV, Hepatitis B & C and TB



# Impact of Drug Abuse



Stroke



Brain Damage



Epilepsy (வலிப்பு நோய்)





Early Death





Suicides


# Impact of Drug Abuse












# CYCLE OF SUBSTANCE ABUSE




1. Initial Use/Experiment/Curiosity

2. Abuse: Repeated Use of Substance to seek Pleasure

3. Tolerance: Higher use of drugs to achieve same pleasure


4. Dependence: Body will physically depend on the drug

5. Addiction: Person continues use of drug despite negative consequences

6. Withdrawal: When a person stops using the drugs

7. Treatment: Rehabilitation through detoxification & counselling

# Health Impacts of Drug and Substance Use



# DRUGS CAN AFFECT THE PHYSICAL PARTS & DETERIORATE THE APPEARANCE

- Brain
- Lungs
- Liver
- Kidneys
- Stomach
- Heart
- Bones
- Hair

- Weight
- Skin
- Eyes
- Ears
- Nose
- Mouth
- Muscles
- Chest
- Physique

# Drugs and substances first affect the body's vital organs.



# Step-by-Step Drug Effects









# Effects of Drug and Substance Abuse





# Dear Students

- ❖ Do not use unknown substances out of curiosity or because of peer pressure.
- ❖ If you have accidentally taken drugs, don't hide it from your parents or teachers. Seek help immediately.
- ❖ Don't delay in getting proper counselling or support to quit the harmful habit. Early help can make a big difference.
- ❖ If you know a friend or classmate who is using drugs, inform a trusted teacher or school counselor right away.
- ❖ Drugs and substance abuse can ruin your life. They can affect your education, physical and mental health, your ability to reach your goals, and your future plans. Substance abuse can also cause emotional pain and distress in your family, taking away their peace and happiness.

# Dear Students

- If you are currently using drugs or other harmful substances, talk to a teacher or counselor. They are there to support and guide you on the path to recovery. You are not alone, and it’s never too late to make a positive change.
- Every student has a responsibility to help and protect their friends, family, and community.
- If you see someone selling drugs or harmful substances near your home or school, report it immediately to a teacher or a trusted adult or law enforcement agency.
- If anyone offers you drugs or substances, say a firm "No." Then, report it to your parents, teachers, or headmaster. They will take the right action to protect you.

# Dear Students

- ❖ If someone in your family or neighborhood is using drugs or substances, share the Tele MANAS national toll-free helpline number 14416 with them. It offers free counseling and support to help people quit harmful habits.
- ❖ You are the pillar of our nation. Be proud to protect your society.
- ❖ You can also download and use the Drug Free TN mobile app, available for Android and iOS, to report the issues anonymously.
- ❖ To report illegal drug or substance selling in your area, you can
  - ❖ Call the toll-free number: 10581
  - ❖ Send a WhatsApp message to: 9498110581

# Health Risks of Using Banned Tobacco Products such as Cool Lip, Hans, etc.: Essential Information for students

போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு

SAY NO TO DRUGS

DRUG FREE TAMIL NADU

# Facts about Cool Lip and other similar banned tobacco products

- **Global Adult Tobacco Survey** indicates that over **42% of people** use tobacco products, including both smoking and non-smoking forms. Among these, a high proportion of people use **non-smoking tobacco products** like **chewing tobacco, paan, gutka**, and other similar substances.

- Currently, many **school and college students** are using a particular product called **"Cool Lip"**. This product is made purely **from tobacco and is classified as a banned substance**. It is not a chocolate or mouth freshener as some may believe.

# Facts about Cool Lip and other similar banned tobacco products

- It is a **highly addictive**, menthol-based product designed to look like a small, covered **rectangular product**, about the size of an **Bubble gum piece**. Most of the students use this product without knowing its ill effects and end up becoming addicted to it.

- Cool Lip is a **dangerous product**, and many students use it due to **peer pressure, curiosity**, and **misinformation**.

- Some students are told by their friends that it is a **mouth freshener** or gives them a **boost of energy**, which encourages them **to try it**.

- Because of the addictive nature of the product, users often continue using it on a **daily or even hourly basis.**

# Reasons for Usage

- **Peer Pressure:** Many children report that they were introduced to Cool Lip by friends, brothers, neighbours, or relatives.
- **Curiosity and Experimentation:** The desire to fit in and curiosity to try new things often leads children to experiment with tobacco products.
- **Lack of Awareness:** Many children are not fully aware of the harmful effects of using such products.
- **Addiction:** Once they start, it difficult to stop due to the addictive nature of tobacco.

# Scientific Facts

- Tobacco use at a young age is **highly harmful** and can cause **long-term health issues** such as **cancer, heart disease**, and **lung disorders**.
- **Menthol-based tobacco products** are often **more addictive** because they mask the harsh taste of tobacco, making it **easier for young** people to start using them.
- Nicotine, found in all tobacco products, is a **strongly addictive substance**. It can cause dependency, and users may experience the ill effects as days go by.

# Nicotine in tobacco

Nicotine is a highly addictive chemical found in tobacco products, such as cigarettes, cigars and chewing tobacco

# Types of Tobacco Use

## Smokeless tobacco

Snuff powder
Pan Masala
Gutka
Cool lip
Hans, Ganesh etc







## Smokeless tobacco

Cigars
Beedi
Cigarette



# Dangers of Tobacco Use





**Lung Disease**




**Weak Bones**



**Heart Disease**






**Gastrointestinal Disease**

**Cancer**





**Dental Problems**


# Symptoms of Tobacco effect

## Bad breath or body odor



Nicotine has a distinctive odor that is noticeabl

## Yellowing of fingers and teeth



Nicotine stains teeth and fingers.



## Coughing or wheezing

Nicotine irritates the lungs leading to respiratory problems.



## Frequent throat clearing and throat irritation

This is a sign of irritation caused by nicotine.

## Poor oral hygiene



Use of chewable tobacco products can cause cavities, worn down teeth surfaces, white patches inside the mouth.


# Symptoms of Tobacco effect

## Drowsiness or Dull/Bright Eyes



Users may show signs of **drowsiness or dull/bright eyes**, which could be a sign of the substance effect on the body.

## Gum Damage, Mouth Ulcers etc.



Frequent use of Cool Lip can lead to **gum damage, mouth ulcers**, and **sores** on the inside of the mouth.

## Nervous system, Shaking hands etc.



Prolonged use can affect the **nervous system**, leading to **shaking hands, body tremors**, and other **health issues**.

# How to Identify a Cool Lip, Hans, Ganesh & Other Tobacco User

- The product (cool lip) is usually placed inside the **upper or lower lip**, which may cause visible **swelling** or changes in the **size of the lips**.
- The person may **speak less frequently** or avoid **opening their mouth**, as they are trying to **hide the product**.
- Users may frequently **spit on the ground** because the tobacco product causes **excess saliva production**.
- The mouth may appear to be **constantly closed**, and sometimes it can take on a **cone shape** due to the product being placed inside.
- A small amount of menthol may remain on the **user's fingers** after handling the product and hence menthol smell will be present.


The use of **Cool Lip** and similar tobacco products in schools is a serious health issue.


## Harmful Effects of Cool Lip and Other Similar Banned Tobacco Products






Mouth cancer due to tobacco usage







# SAY

# NO


## TO


# COOL LIP


# & SIMILAR TOBACCO

# PRODUCTS

# Symptoms of Tobacco Withdrawal










# How to Manage Withdrawal Symptoms

**Chew on a candy or gum**








**Distract yourself with music or physical activities**



**Practice mindfulness activities and allow the negative emotions to pass**

**Ask for professional help if needed**



# Dear Students

- **Do not use tobacco products like Cool Lip, Hans, and other banned items.**
- **Tobacco products can spoil your whole life. They can affect your education, physical activities, health and stop you from reaching your goals, achievements, and future plans. They can also bring distress in your family and take away the peace and happiness of your family members and also ruins your social life.**
- **If your friend uses tobacco products like Cool Lip, Hans, beedis, or cigarettes, advise them not to use those harmful products. Also, report it to your teacher. Teachers are there to help and protect your friends.**
- **If you are using tobacco, talk to your teacher. He or she will guide you on how to quit this habit and support you.**

# Dear Students

- Every student has the responsibility to help and protect friends and the community.
- If someone is selling banned tobacco products near your house or school, report it immediately to your teacher.
- If anyone offers you a banned tobacco product, say "No." Then report it to your family members, teacher or headmaster. They will take the right action.
- If someone in your family or neighbourhood is using these products, give them the toll-free number (14416 & 1800112356) so they can get counselling and quit this habit.

# Dear Students

- **You are the pillar of our Nation. Be proud to protect your society.**
- **To report banned tobacco products in your area, call the toll-free number: 10581 or send a message to the WhatsApp number: 94981 10581.**
- **You can also download and use the Drug FREE TN mobile app, available for Android and iOS, to report the issue anonymously.**


Reporting
System
&
Counseling

# Drug Free TN Mobile App

GET IT ON Google Play

SAY NO TO DRUGS
DRUG FREE TAMIL NADU

Download on the App Store

## For making complaints:

**10581**

**9498410581**

**dad.ebcid@gmail.com**

**http://enforcementbureautn.org**

## Enforcement Bureau Crime Investigation Department

# IF YOU NEED COUNSELING PLEASE CALL



**14416**

**&**

**1800112356**

# DON'T THINK RECOVERY IS A BIG THING; FIRST, YOU SHOULD THINK

# Thank you





# போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு தடுப்பு மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் குறித்த வழிகாட்டுதல்

# அறிமுகம்

- போதைப்பொருள் பயன்பாடு ஒரு குறிப்பிடத்தக்க சமூக நிகழ்வாக மாறியுள்ளது, மேலும் உலகம் முழுவதும், இது ஒரு அபாய ஒலியை எழுப்பும் நிகழ்வாக உள்ளது.
- போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாட்டை உறுதிசெய்யும் வகையில் தொடர்புடைய துறைகளின் அனைத்துச் செயல்பாடுகளையும் வழிநடத்தி, ஒருங்கிணைத்து, கண்காணிப்பதற்கென இயக்க மேலாண்மை அலகு (MMU) நிறுவப்பட்டது.
- போதைப் பொருள் பழக்கத்தினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, போதைப் பொருள் எதிர்ப்பு மன்றம் (ADC) 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. போதைப் பொருள் எதிர்ப்பு மன்றத்தின் குறிக்கோள் "போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு" என்ற நிலையை உருவாக்குவது .
- போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வை நிலைநிறுத்துவதற்கான குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு, அம்முயற்சியில் மாணவர்களை பங்கேற்கச் செய்யும் நோக்கத்துடன் இரண்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன அதாவது, போதைப் பொருள் எதிர்ப்பு மன்றங்கள் (ADC) மற்றும் நாட்டு நலப்பணித்திட்டம் (NSS)/தேசிய மாணவர் படை(NCC)/ செஞ்சுருள் சங்கம்(RRC)/இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்(YRC)/ போன்ற தன்னார்வலர்களுக்கான தன்னார்வ திட்டம் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

# அறிமுகம்

- சமூகத்தில் போதைப்பொருள் தொடர்பான பிரச்சனைகளுக்கு, சமூக மட்டத்தில் அனைவரும் பொறுப்பேற்க வேண்டிய ஒன்றாகும். போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான பிரச்சனைகள் பெரும்பாலும் குழு சார்ந்த (organized group) பிரச்சனைகளாகும். எனவே, போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான போராட்டத்தில், அடிமட்ட அளவில் இந்த பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய குழுக்களை நாம் உருவாக்க வேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்சனைகளை திறம்பட தீர்க்க முடியும்.

# அறிமுகம்

**போதைப்பொருட்கள்:**

ஒரு தனிநபரின் உடல் அல்லது மனம் சார்ந்த செயல்பாட்டை மாற்றும் எந்தவொரு இரசாயனமும் போதைப்பொருளாகும்.

**போதைப்பொருள் பயன்பாடு:**

எந்தவித மருத்துவ நோக்கமின்றி, ஒரு மருந்து அல்லது போதைப்பொருளை அதன் அளவு, வீரியம், அல்லது பயன்பாட்டு முறையை மீறி, உடல் அல்லது மனம் சார்ந்த செயல்பாடுகளுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பயன்படுத்துவது போதைப்பொருள் முறைகேடு அல்லது தவறான பயன்பாடு எனப்படுகிறது.

**சகிப்புத்தன்மை மற்றும் சார்பு நிலை:**

போதைப் பொருட்களை தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டே இருப்பதால் நாளடைவில் அவை பழக்கமாகிவிடும். ஆரம்பத்தில் சிறிய அளவில் பயன்படுத்தத் தோன்றினாலும், நாளடைவில் அதே உணர்வைப் பெற அதிகளவில் பயன்படுத்தும் நிலை ஏற்படும். இதனை "போதைப்பொருள் சகிப்புத்தன்மை" என்று கூறுவர்.

ஒருவர் போதைப்பொருளைப் பயன்படுத்தத் தொடங்கி, அதை தொடர்ந்து பயன்படுத்தியே ஆக வேண்டும் என்ற ஒரு நிலைக்கு வரும்போது, அது "சார்பு நிலை" என்று அழைக்கப்படுகிறது. இந்நிலையில், அவர்களால் அந்த போதை பொருள் இல்லாமல் இருக்க முடியாது, ஏனெனில் அவர்களுடைய உடலும் மனமும் அதை சார்ந்தே செயல்பட தொடங்கிவிடும்.

# பொதுவாக பயன்படுத்தப்படும் போதைப் பொருட்கள்

போதைப் பொருட்கள்

பொதுவாக பயன்படுத்தப்படும் போதைப் பொருட்கள்

- இயற்கை
  எ. கா.: கஞ்சா
- பாதி செயற்கை
  எ. கா.: ஹெராயின்
- செயற்கை
  எ. கா.: மெத்தம்பேட்டமைன்

# போதைப் பொருட்களின் விளைவின் வகைகள்

## தூண்டக் கூடிய மருந்துகள்

- மத்திய நரம்பு மண்டலத்தைத் தூண்டி, இதயத் துடிப்பை அதிகரித்து, இரத்த அழுத்தத்தை அதிகரித்து, மன செயல்பாட்டை அதிகரிக்கிறது.
- (எ.கா.) கோகைன், எம்.டி.எம்.ஏ, ஆம்பெடமைன் போன்றவை.

## மனச்சோர்வு மருந்துகள்


- மத்திய நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டை மெதுவாக்கி, மகிழ்ச்சியின் நிலைகள் (வலுவான மகிழ்ச்சி உணர்வு), போதை தளர்வு ஆகியவற்றைத் தூண்டும்.
- (எ.கா.)ஹெராயின், கஞ்சா, முதலியன,

## ஹாலுசினோஜன்கள்


- மனதை விரிவுபடுத்தும் நோக்கில் சாதாரண பார்வைகள், கேட்கும் திறன் மற்றும் உணர்வு செயல்பாடுகளை சிதைக்கும் மருந்துகள்.
- (எ.கா.) எல்.எஸ்.டி, மேஜிக் காளான், முதலியன,



மத்திய நரம்பு மண்டலம்





சாப்பிடும் பொழுது




போதைப் பொருட்களை உட்கொள்ளும் பொழுது

# போதைப்பொருள் பயன்பாடு பங்களிக்கும் மூன்று முக்கிய காரணிகள்




## ஏன் இளம் பருவத்தினர் போதைப் பொருளைப் பயன்படுத்துகிறார்கள்?




நண்பர்களின் அழுத்தம்/வற்புறுத்துதல்




ஆர்வம்



கல்வி மற்றும் விளையாட்டில் தோல்வியை தழுவுதல்



குடும்பத்தின் தாக்கம்




விழிப்புணர்வு இல்லாமை



பரிசோதனை

# ஏன் இளம் பருவத்தினர் போதைப் பொருளைப் பயன்படுத்துகிறார்கள்?



தப்பியோடும் போக்கு



மன அழுத்தம் மற்றும் உணர்ச்சிப் போராட்டங்கள்



பொதுக்கல்வி இல்லாமை

# போதைப் பொருள் பயன்பாட்டின் அறிகுறிகள் (உடல் மாற்றம்)

- மங்கலான/பளபளப்பான கண்கள்
- தூக்கமின்மை, இருமல் மற்றும் வயிற்றுப்போக்கு
- சுவாசப் பிரச்சனைகள்
- பசியின்மை
- எடை இழப்பு
- உடல் நோய் எதிர்ப்பு சக்தி குறைவு

# போதைப் பொருள் பயன்பாட்டின் அறிகுறிகள் (உளவியல் மாற்றம்)

- மனநிலை மாற்றங்கள் & மனநல கோளாறுகள்
- நினைவாற்றல் பிரச்சனை
- எதிலும் கவனம் செலுத்த இயலாமை
- ஊக்கமின்மை

# போதைப் பொருள் பயன்பாட்டின் அறிகுறிகள் (நடத்தையில் மாற்றம்)

- ஆபத்தான நடவடிக்கையில் ஈடுபட ஆசைப்படுதல்
- தோற்றத்தில் மாற்றம்
- மோசமான ஆடை உணர்வு
- தவிர்க்க முடியாத உடல் நடுக்கம்
- அவமானமாக உணர்தல்
- ஒவ்வொரு நாளும் ஆர்வம் குறைந்தது
- தனியுரிமை மற்றும் ரகசியத்தன்மைக்கு முன்னுரிமை
- போதைப் பொருள் சகிப்புத்தன்மை அதிகரித்தல்

# போதைப் பொருள் பயன்பாட்டின் அறிகுறிகள் (சமூக மாற்றம்)

கல்வி பயில்வதில் சிக்கல்கள் – பள்ளி/கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்துதல், செயல்திறனில் சரிவு ஏற்படுதல்


நல்ல நண்பர்களை இழத்தல்

பெற்றோர் நம்பிக்கையை இழத்தல்

# போதைப்பொருள் பயன்பாட்டின் தாக்கம்

உடல், உளவியல், ஒழுக்கம் மற்றும் அறிவாற்றல் பாதித்தல்






குடும்ப தகராறு அதிகரித்தல்: உறவுகளில் முறிவு, ஈவ்டீசிங், மோதல்கள் மற்றும் திடீர் கொலைகள் ஏற்படுவது

மற்றவர்களுக்கு சட்டவிரோதமாக போதைப்பொருட்களை விநியோகித்தல்




எச்.ஐ.வி, ஹெபடைட்டிஸ் பி & சி மற்றும் காசநோய்க்கான அபாயம்



# போதைப்பொருள் பயன்பாட்டின் தாக்கம்



பக்கவாதம்



மூளை பாதிப்பு



வலிப்பு நோய்




குறைந்த காலத்தில் மரணம் ஏற்படுதல்




தற்கொலைகள்


# போதைப்பொருள் பயன்பாட்டின் தாக்கம்

மன ஆரோக்கியத்தை பாதிக்கும்





கல்வி செயல்திறன் பாதிக்கும்





மூளை வளர்ச்சியை பாதிக்கும்





ரிஸ்க் எடுக்கும் நடத்தை

# போதைப்பொருள் பயன்பாட்டின் தாக்கம்

குடும்ப மாற்றங்கள்








போதைப்பொருளை சார்ந்து இருப்பதை அதிகரித்தல்




சட்ட விளைவுகளை எதிர்கொண்டது

# போதைப் பொருள் பயன்பாட்டின் சுழற்சி




1. ஆரம்ப கால பயன்பாடு/பரிசோதனை/ஆர்வம்

2. பயன்பாடு: இன்பத்தைத் தேடுவதற்காகப் போதைப் பொருளைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துதல்.

3. சகிப்புத்தன்மை: அதே இன்பத்தை அடைய போதைப் பொருட்களை அதிகமாக பயன்படுத்துவது.


4. சார்புநிலை: உடல், உடல் ரீதியாக போதைப் பொருட்களை சார்ந்திருக்கும்.

5. அதீத போதைப்பழக்கம்: எதிர்மறையான விளைவுகள் இருந்தபோதிலும் நபர் தொடர்ந்து போதைப்பொருளைப் பயன்படுத்துவது.

6. பின்வாங்கல்: ஒருவர் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதை நிறுத்தும்போது ஏற்படும் நிகழ்வு

7. சிகிச்சை: சிகிச்சை மற்றும் ஆலோசனை மூலம் மறுவாழ்வு.

# போதைப்பொருள் பயன்பாட்டினால் உடலில் ஏற்படும் தாக்கம்



# போதைப் பொருட்கள் உடல் தோற்றத்தை மாற்றும்

- மூளை
- கல்லீரல்
- சிறுநீரகங்கள்
- வயிறு
- இதயம்
- எலும்பு
- முடி

- உடல் எடை
- தோல்
- கண்கள்
- காதுகள்
- மூக்கு
- வாய்
- தசைகள்
- மார்பு
- உடலமைப்பு

# போதைப் பொருட்கள் முதலில் உறுப்புகளை பாதிக்கும்



# படிப்படியான போதைப் பொருட்கள் தாக்கம்









# போதைப் பொருட்களின் தாக்கம்





# அன்புள்ள மாணவர்களே

- ஆர்வத்தினாலோ அல்லது நண்பர்களின் அழுத்தம் காரணமாகவோ தெரியாத போதைப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டாம்.
- நீங்கள் தற்செயலாக போதைப்பொருட்களை உட்கொண்டிருந்தால், அதை உங்கள் பெற்றோரிடமிருந்தோ அல்லது ஆசிரியர்களிடமிருந்தோ மறைக்காதீர்கள். உடனடியாக உதவியை நாடுங்கள்.
- தீங்கு விளைவிக்கும் போதைப் பொருட்கள் பழக்கத்தை விட்டுவிட சரியான ஆலோசனை அல்லது ஆதரவைப் பெறுவதில் தாமதிக்காதீர்கள். ஆரம்பகால உதவி பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும்.
- போதைப்பொருட்களைப் பயன்படுத்தும் நண்பர் அல்லது வகுப்புத் தோழரை நீங்கள் அறிந்தால், உடனடியாக ஒரு நம்பகமான ஆசிரியர் அல்லது பள்ளி ஆலோசகரிடம் தெரிவிக்கவும்.
- போதைப்பொருட்கள் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு உங்கள் வாழ்க்கையை அழிக்கக்கூடும். அவை உங்கள் கல்வி, உடல் மற்றும் மன ஆரோக்கியம், உங்கள் இலக்குகளை அடையும் திறன் மற்றும் உங்கள் எதிர்காலத் திட்டங்களை பாதிக்கலாம். போதைப்பொருள் பயன்பாடு உங்கள் குடும்பத்தில் வலி மற்றும் துயரத்தையும் ஏற்படுத்தக்கூடும், அவர்களின் அமைதியையும் மகிழ்ச்சியையும் பறிக்கும்.

# அன்புள்ள மாணவர்களே

- நீங்கள் தற்போது போதைப்பொருள் அல்லது பிற தீங்கு விளைவிக்கும் பொருட்களைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், ஆசிரியர் அல்லது ஆலோசகரிடம் பேசுங்கள். அவர்கள் உங்களை ஆதரிக்கவும், மீட்புக்கான பாதையில் உங்களை வழிநடத்தவும் இருக்கிறார்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தங்கள் நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் சமூகத்திற்கு உதவவும் பாதுகாக்கவும் பொறுப்பு உள்ளது.
- உங்கள் வீடு அல்லது பள்ளிக்கு அருகில் யாராவது போதைப்பொருள் அல்லது தீங்கு விளைவிக்கும் பொருட்களை விற்பனை செய்வதைக் கண்டால், உடனடியாக ஒரு ஆசிரியர் அல்லது நம்பகமான நபர்கள் மற்றும் சட்ட அமலாக்க முகமைகள் ஆகியோரிடம் புகாரளிக்கவும்.
- யாராவது உங்களுக்கு போதைப்பொருள் அல்லது தீங்கு விளைவிக்கும் பொருட்களை வழங்கினால், உறுதியாக "வேண்டாம்" என்று சொல்லுங்கள். பின்னர், உங்கள் பெற்றோர், ஆசிரியர்கள் அல்லது தலைமை ஆசிரியரிடம் புகாரளிக்கவும். அவர்கள் உங்களைப் பாதுகாக்க சரியான நடவடிக்கை எடுப்பார்கள்.

# அன்புள்ள மாணவர்களே

- உங்கள் குடும்பத்திலோ அல்லது சுற்றுப்புறத்திலோ யாராவது போதைப்பொருள் அல்லது பிற தீங்கு விளைவிக்கும் பொருட்களைப் பயன்படுத்தினால், தேசிய கட்டணமில்லா உதவி எண் 14416 ஐ அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இது தீங்கிழைக்கு பழக்கங்களை விடுவதற்கு மக்களுக்கு ஆலோசனை மற்றும் ஆதரவை வழங்குகிறது.
- நீங்கள் நமது நாட்டின் தூண். உங்கள் சமூகத்தைப் பாதுகாப்பதில் பெருமை கொள்ளுங்கள்.
- பிரச்சனைகளை புகாரளிக்க, Android மற்றும் iOS க்குக் கிடைக்கும் Drug Free TN மொபைல் செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.
- உங்கள் பகுதியில் சட்டவிரோத போதைப்பொருள் அல்லது பொருள் விற்பனையைப் புகாரளிக்க, நீங்கள்
  - கட்டணமில்லா எண்ணை அழைக்கவும்: 10581
  - வாட்ஸ்அப் செய்தியை அனுப்பவும்: 9498110581

# கூல்லிப், ஹான்ஸ் போன்ற தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் உடல்நல அபாயங்கள்: மாணவர்களுக்கான அத்தியாவசியத் தகவல்

# கூல்லிப் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பற்றிய உண்மைகள்

- உலகளாவிய வயது வந்தோர் புகையிலை கணக்கெடுப்பின் படி, 42% – க்கும் அதிகமான மக்கள் புகையிலை பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். இதில் புகைத்தல் மற்றும் புகைக்காத வடிவங்கள் இரண்டும் அடங்கும். இவற்றில், அதிக விகிதத்தில் உள்ள மக்கள் மெல்லும் புகையிலை, பான், குட்கா மற்றும் பிற சார்ந்த பொருட்களை அதாவது புகைக்காத புகையிலை பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.

- தற்போது, பல பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் "கூல்லிப்" என்ற குறிப்பிட்ட புகையிலை தயாரிப்பை பயன்படுத்துகின்றனர். இந்த தயாரிப்பு முற்றிலும் புகையிலையிலிருந்து தயாரிக்கப்படுகிறது மற்றும் தடைசெய்யப்பட்ட பொருளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. சிலர் நம்புவது போல் இது சாக்லேட் அல்லது வாய்க்கு புத்துணர்ச்சியூட்டும் பொருள் அல்ல.

# கூல்லிப் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பற்றிய உண்மைகள்

- இது மிகவும் அடிமையாக்கக் கூடிய, மென்தால் அடங்கிய தயாரிப்பாகும், இது ஒரு சிறிய, மூடிய செவ்வகப் பொருளைப் போல தோற்றமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது ஒரு பபிள் கம் துண்டு போன்று இருக்கும். பெரும்பாலான மாணவர்கள் இந்தப் பொருளின் தீய விளைவுகளை பற்றி அறியாமலேயே இதைப் பயன்படுத்துகிறார்கள், இறுதியில் அதற்கு அடிமையாகிறார்கள்.

- கூல்லிப் ஒரு ஆபத்தான தயாரிப்பு பொருளாகும், மேலும் பல மாணவர்கள், நண்பர்களின் அழுத்தம், ஆர்வம் மற்றும் தவறான தகவல் காரணமாக இதைப் பயன்படுத்துகிறார்கள்.

- சில மாணவர்கள் அவர்களின் நண்பர்களிடத்தில் இது ஒரு வாய் புத்துணர்ச்சி (மவுத் ஃப்ரெஷ்னர்) அல்லது அவர்களுக்கு ஆற்றலைத் தருகிறது என்று கூறுவார்கள். இது போன்ற சொற்கள் அவர்களை கூல்லிப் பயன்படுத்த முயற்சிக்க ஊக்குவிக்கிறது.

- இந்த தயாரிப்பின் அடிமைத்தன்மை காரணமாக, உபயோகிப்பவர்கள் பெரும்பாலும் தினசரி அல்லது மணிநேர அடிப்படையில் இதனை தொடர்ந்து பயன்படுத்துகின்றனர்.

# பயன்பாட்டிற்கான காரணங்கள்

- **நண்பர்களின் அழுத்தம்:** பல குழந்தைகள் கூல்லிப்பை நண்பர்கள், சகோதரர்கள், அண்டை வீட்டார் அல்லது உறவினர்கள் அறிமுகப்படுத்தியதாக தெரிவிக்கின்றனர்.
- **ஆர்வம் மற்றும் பரிசோதனை:** புதிய விஷயங்களை முயற்சிக்க வேண்டும் என்ற ஆர்வமும், ஒத்துப்போகும் விருப்பமும் பெரும்பாலும் குழந்தைகளை புகையிலைப் பொருட்களைப் பரிசோதிக்க/பயன்படுத்த வழிவகுக்கிறது.
- **விழிப்புணர்வு இல்லாமை:** பல குழந்தைகள் புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்கு, விளைவிக்கும் விளைவுகள் குறித்து முழுமையாக அறிந்திருக்கவில்லை.
- **அடிமையாகுதல்:** அவர்கள் ஒரு முறை ஆரம்பித்தால், புகையிலையின் அடிமையாக்கும் தன்மை காரணமாக அதை நிறுத்துவது கடினம்.

## அறிவியல் உண்மைகள்

- இளம் வயதிலேயே புகையிலையை பயன்படுத்துவது மிகவும் தீங்கு விளைவிக்கும். புற்றுநோய், இதய நோய் மற்றும் நுரையீரல் கோளாறுகள் போன்ற நீண்டகால உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

- மென்தால் சார்ந்த புகையிலைப் பொருட்கள் பெரும்பாலும் அதிக போதைப்பொருளாக இருக்கின்றன. ஏனெனில் அவை புகையிலையின் கடுமையான சுவையை மறைத்து, இளைஞர்கள் புகையிலைப் பொருட்கள் பயன்படுத்தத் தொடங்குவதை எளிதாக்குகின்றன.

- அனைத்து புகையிலை பொருட்களிலும் காணப்படும் நிக்கோடின், ஒரு வலுவான அடிமையாக்கும் பொருளாகும். இது சார்புநிலையை ஏற்படுத்தும், மேலும் பயன்படுத்துபவர்கள் நாட்கள் செல்ல, செல்ல அதன் மோசமான விளைவுகளை அனுபவிக்க நேரிடும்.

# புகையிலையில் உள்ள நிக்கோட்டின்

நிக்கோட்டின் என்பது புகையிலை பொருட்களில் இருக்கும் ஒரு வேதிப்பொருள். இது சிகரெட், சுருட்டு மற்றும் மெல்லக் கூடிய புகையிலை வகைகளில் இருக்கும்.

## புகையிலைப் பொருட்களின் பயன்பாடு வகைகள்

### புகை ஏற்படுத்தாத புகையிலை வகைகள்

முக்குப் பொடி
பான் மசாலா
குட்கா
கூல்லிப்
ஹான்ஸ், கணேஷ்
இதர பொருட்கள்







### புகை ஏற்படுத்தும் புகையிலை வகைகள்

சுருட்டு
பீடி
சிகரேட்



# புகையிலைப் பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்துகள்








நுரையீரல் நோய்



எலும்புகள் வலுவிழத்தல்




இதய நோய்



இரைப்பை நோய்



புற்றுநோய்



பல் சார்ந்த பிரச்சினைகள், மேலும் பல


# புகையிலை பாதிப்பின் அறிகுறிகள்

## வாய் அல்லது உடலில் துர்நாற்றம்



நிகோடினுக்கு ஒரு தனி வாசனை இருக்கிறது, அது சுலபமாகத் தெரிந்துவிடும்.

## விரல்களும் பற்களும் மஞ்சள் நிறமாதல்



நிக்கோட்டின் விரல்களையும், பற்களையும் மஞ்சள் நிறமாக மாற்றும்.

## இருமலும் மூச்சுத் திணறலும்



நிக்கோட்டின் நுரையீரலை எரிச்சலடையச் செய்து, சுவாசப் பிரச்சினைகளை உண்டாக்குகிறது.

## அடிக்கடி தொண்டையை சரி செய்தல் மற்றும் தொண்டை எரிச்சல்



இது நிக்கோட்டினால் ஏற்படும் எரிச்சலின் அறிகுறி.


## வாய் தூய்மையின்மை



மெல்லும் புகையிலை பொருட்களைப் பயன்படுத்துவதால் பற்களில் துளைகள் ஏற்படலாம், பற்களின் மேல் பகுதி பாதிக்கப்படலாம், மற்றும் வாய்க்குள் வெள்ளைத் திட்டுகள் தோன்றலாம்.


# புகையிலை பாதிப்பின் அறிகுறிகள்

## அரைதூக்க நிலை அல்லது மங்கலான/பிரகாசமான கண்கள்



பயன்படுத்துபவர்களின் கண்கள் அரை தூக்க நிலையிலோ அல்லது மங்கலான/பிரகாசமான கண் அறிகுறிகளைக் காட்டலாம். இது உடலில் உள்ள புகையிலை பொருளின், விளைவின் அறிகுறியாக இருக்கலாம்.

## பல் ஈறுகளில் பாதிப்பு, வாய்ப் புண்கள் மற்றும் பல



கூல்லிப்பை அடிக்கடி பயன்படுத்துவதால் பல் ஈறுகளில் பாதிப்பு, வாய் புண்கள் மற்றும் வாயின் உட்புறத்தில் புண்கள் ஏற்படலாம்.

## நரம்பு மண்டலம், கை நடுக்கம் மற்றும் பல



நீடித்த புகையிலை பயன்பாடு நரம்பு மண்டலத்தைப் பாதித்து, கை நடுக்கம், உடல் நடுக்கம் மற்றும் பிற உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

# கூல்லிப், ஹான்ஸ், கணேஷ் மற்றும் பிற புகையிலை பயன்படுத்துபவரை எவ்வாறு அடையாளம் காண்பது

- கூல்லிப், ஹான்ஸ், கணேஷ் பொதுவாக மேல் அல்லது கீழ் உதட்டின் உள்ளே வைக்கப்படுகிறது, இது உதடுகளின் மேல்பகுதி வெளியே தெரியும் அளவிற்கு வீக்கம் அல்லது மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும்.

- பயன்படுத்தும் நபர், பயன்படுத்துவதை மறைக்க முயற்சிப்பதால் குறைவாகவே பேசலாம் அல்லது வாய் திறந்து பேசுவதை தவிர்க்கலாம்.

- புகையிலை பயன்பாடு அதிகப்படியான உமிழ்நீர் சுரப்பு ஏற்படுத்துவதால் பயன்படுத்துபவர்கள் அடிக்கடி தரையில் எச்சிலை துப்பலாம்.

- வாய் தொடர்ந்து மூடப்பட்டிருப்பது போல் தோற்றமளிக்கும். மேலும் சில சமயங்களில் புகையிலை பயன்பாடு உள்ளே வைக்கப்படுவதால் வாய் பகுதி தாடை உள்வாங்கி கூம்பு வடிவம் போன்று தோற்றமளிக்கும்.




- புகையிலை பொருட்களை (கூல்லிப்) கையாண்ட பிறகு உபயோகப்படுத்துபவரின் விரல்களில் மென்தால் வாசனை ஒட்டி இருக்கலாம், எனவே அதன் வாசனை கைகளில் இருக்கும்.

பள்ளிகளில் கூல்லிப் மற்றும் அதுபோன்ற புகையிலை பொருட்களைப் பயன்படுத்துவது ஒரு கடுமையான உடல்நலப் பிரச்சினையாகும்.

**கூல்லிப் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் தீங்கு விளைவிக்கும்.**




# புகையிலை பொருட்களால் ஏற்படும் வாய் புற்றுநோய்

வேண்டாம் என்று


சொல்லுங்கள்

கூல்லிப் மற்றும் இது

போன்ற புகையிலை


பொருட்களை


# புகையிலை பழக்கத்தை கைவிடுவதால் உண்டாகும் அறிகுறிகள்




பதற்றம்


அமைதியின்மை





விரக்தி

# புகையிலை பழக்கத்தை கைவிடுவதால் உண்டாகும் அறிகுறிகள்




எரிச்சல்

தூக்கமின்மை



# புகையிலை பழக்கத்தை நிறுத்தும்போது ஏற்படும் அறிகுறிகளை எப்படி கையாள்வது








ஒரு மிட்டாயை எடுத்து
பொறுமையாக சுவையுங்கள்.



பாடல்கள் கேட்பதன் மூலமோ அல்லது உடற்பயிற்சிகள் செய்வதன் மூலமோ உங்கள் கவனத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.



மனதை சாந்தப்படுத்தும் பயிற்சிகளை மேற்கொண்டு, எதிர்மறை எண்ணங்கள் விலகிச் செல்ல அனுமதியுங்கள்.



தேவை இருந்தால் மருத்துவரின்
உதவியை நாடுங்கள்.

# அன்பார்ந்த மாணவர்களே

- கூல்லிப், ஹான்ஸ் போன்ற புகையிலை பொருட்களையும், தடைசெய்யப்பட்ட பிற பொருட்களையும் ஒரு போதும் பயன்படுத்த வேண்டாம்.
- புகையிலை பொருட்கள் உங்கள் முழு வாழ்க்கையையும் கெடுத்துவிடும். அவை உங்கள் கல்வி, உடல் செயல்பாடுகள், ஆரோக்கியத்தை பாதிக்கலாம் மற்றும் உங்கள் இலக்குகள், சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்களை தடுக்கலாம். அவை உங்கள் குடும்பத்தில் துயரத்தையும், உங்கள் குடும்ப உறுப்பினர்களின் அமைதியையும், மகிழ்ச்சியையும் பறித்துவிடும்.
- உங்கள் நண்பர் கூல்லிப், ஹான்ஸ், பீடி அல்லது சிகரெட் போன்ற புகையிலை பொருட்களைப் பயன்படுத்தினால், அந்த தீங்கு விளைவிக்கும் பொருட்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று அவர்களுக்கு அறிவுறுத்துங்கள். மேலும், உங்கள் ஆசிரியரிடம் அதைப் பற்றி தெரிவிக்கவும். உங்கள் நண்பர்களுக்கு உதவிடவும், பாதுகாக்கவும் ஆசிரியர்கள் உள்ளனர்.
- நீங்கள் புகையிலை பயன்படுத்துகிறீர்கள் என்றால், உங்கள் ஆசிரியரிடம் மனம்விட்டு பேசுங்கள். அவர்கள் உங்களுக்கு அந்த பழக்கத்தை எப்படி கைவிடுவது என்று வழி காட்டுவார்கள் மற்றும் அதிலிருந்து வெளிவருதற்கான தேவையான ஆதரவை கொடுப்பார்கள்.

# அன்பார்ந்த மாணவர்களே

- ஒவ்வொரு மாணவரும் பொறுப்புடன் நடந்து கொண்டு நண்பர்களையும், சமூகத்தையும் பாதுகாக்க உதவிட வேண்டும்.
- உங்கள் வீடு அல்லது பள்ளிக்கு அருகில் யாராவது தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்தால், உடனடியாக அதைப் பற்றி ஆசிரியரிடம் புகாரளிக்கவும்.
- யாராவது புகையிலை பொருட்களை உங்களுக்கு வழங்கினால், "வேண்டாம்" என்று சொல்லுங்கள். பின்னர் உங்கள் குடும்ப உறுப்பினர்கள், ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியரிடம் அதைப் பற்றி புகாரளிக்கவும். அவர்கள் சரியான நடவடிக்கை எடுப்பார்கள்.
- உங்கள் குடும்பத்திலோ அல்லது சுற்றுப்புறத்திலோ யாராவது இந்த பொருட்களைப் பயன்படுத்தினால், அவர்களுக்கு (14416 & 1800112356) இலவச எண்ணைக் கொடுங்கள், இதன் மூலம் அவர்கள் ஆலோசனை பெற்று அந்த பழக்கத்தை விட்டுவிட முடியும்.

# அன்பார்ந்த மாணவர்களே

- நீங்கள் நமது தேசத்தின் தூண்கள். உங்கள் சமூகத்தைப் பாதுகாப்பதில் பெருமை கொள்ளுங்கள்.
- உங்கள் பகுதியில் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் குறித்து புகாரளிக்க, கட்டணமில்லா எண்: 10581 ஐ அழைக்கவும் அல்லது வாட்ஸ்அப் எண்: 94981 10581 க்கு செய்தி அனுப்பவும்.
- புகார் அளித்தது யார் என்று வெளியில் தெரியாமல் புகார் அளிக்க Android மற்றும் iOS இல் கிடைக்கும் Drug FREE TN கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்து நீங்கள் பயன்படுத்தலாம்.


புகார் அளித்தல்
மற்றும்
ஆலோசனை
வழிமுறைகள்
1,000
Q1
Q2
Q3
Q3
Q4

# Drug Free TN கைபேசி செயலி

GET IT ON Google Play

போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு
SAY NO TO DRUGS
DRUG FREE TAMIL NADU

Download on the App Store

அமலாக்கப் பணியகம் – குற்றப் புலனாய்வுத் துறை

## புகார்கள் செய்வதற்கு

TOLL FREE 10581

9498410581

dad.ebcid@gmail.com

http://enforcementbureautn.org

# உளவியல் சார்ந்த ஆலோசனைகள் பெற அழையுங்கள்

## இலவச உதவி எண்கள்



**14416**

**மற்றும்**

**1800112356**

மீண்டு வருதல் ஒரு பெரிய விஷயம் என்று நினைக்காதீர்கள்; முதலில், நீங்கள் மீள வேண்டும் என்று நினையுங்கள்

நன்றி

@MMUDFTN

@MMUDFTN

@ Admin
Mmu-dftn

@MMUDFTN

# நன்றி